மூலம் ஸ்ரீ கர்மயோகி அவர்கள்
சொற்பொழிவு ஆற்றியவர் திரு. நாகராஜன் அவர்கள்
இடம் அம்பத்தூர் தியான மையம்
தேதி 2.03.14

14.10.13

## இந்தியாவில் ஆன்மீகம் வெளிப்படும் இடங்கள்

சந்தனஎண்ணெய் செய்யும் கம்பனியிலிருந்து வரும் எந்தப் பொருளுக்கும் சந்தன வாசனையிருக்கும். **சந்தன மரம் தன்னை வெட்டும் கோடாரியையும் மணக்கச் செய்யும் என்று தாகூர் கூறுகிறார் .இந்தியா ஆன்மீக நாடு. இங்குள்ள மண், மலை, நதி, நீர், தாவரம், மக்கள், வாழ்க்கை, செயல்கள், எண்ணங்கள், உணர்ச்சிகள், விருப்புகள், வெறுப்புகள் ஆகிய அனைத்தும் ஆன்மீக மணம் தவறாமல் உண்டு.** அது அதிதீவிரமாக வெளிப்படுவது பெண்ணின் கற்பில். துரோபதியின் மானத்தையும் , சத்தியவான் உயிரையும் காப்பாற்றியது. காலத்தை நளாயினி போல் நிறுத்தவல்லது. பகவானுடைய '*சாவித்திரி*'எமனை அழித்து அவனை ஒளிமயமான புருஷனாக மாற்றினாள். டிகால் அமெரிக்காவிற்கு வந்தபொழுது "இங்கு சுதந்திரத்தை என்னால் உணர முடிகிறது " என்றார். விமானம் இந்திய எல்லையுள் நுழைந்ததை அறியாத அமெரிக்க பிரயாணி உடல் சாந்தமடைவதைக் கண்டார். விமான ஓட்டி விமானம் இந்திய எல்லைக்குள் வந்து விட்டதை ஒலிபெருக்கியில் அறிவித்தார். **இந்தியாவிற்கு வந்து சில நாள் அல்லது பல மாதம் தங்கிய ஆங்கிலேயர் , அமெரிக்கர் அனைவரும் பெரும் சாதனை புரிந்தவர்கள்.**சமீப காலத்து அனுபவம் ஸ்டீவ் ஜாப் , ரட்யாட்கிப்லிங் நோபல் பரிசு பெற்றார். தாக்கரே இந்தியாவில் பிறந்தவர். பெரிய எழுத்தாளரானார். சர்வதேச அரங்கில் வேலை செய்பவரில் எவராவது பளிச்சென செயல்படுவாரானால் , அவரை விசாரித்தால் தான் பங்களாதேஷில் ஒன்றரை வருடமிருந்தேன். பிறகு World Bank Vice President ஆனேன் என்பார். அவர் இன்று Club of Rome CEOஆக இருக்கிறார். Sheldrakeஉலகப் புகழ் வாய்ந்த விஞ்ஞானி. இவர் மக்கள் , விலங்குகளுடைய உணர்ச்சியை ஆராய்கிறார். ஒரு ஏழு பெரிய விஞ்ஞானிகளை டி.வியில் ஒன்றாகப் பேட்டி கண்டனர். அவருள் இவரும் ஒன்று. இவருடன் பேட்டியளித்த டென்னட் எ ன்பவர் ஷெல்டிரேக் கூறுவதை நிரூபித்து விட்டால் அவர் டார்வினும் நியூட்டனும் இணைந்த புகழ் பெறுவார் என்றார். அவர் இந்தியாவில் ஒன்றரை ஆண்டிருந்தார். ஸ்ரீ அரவிந்தாஸ்ரமம் வந்து *The Life Divine* வாங்கிப் போனார். இந்நூலை இரண்டு பக்கம் படித்தால் தூக்கம் வருகிறது என்றார்.

இன்று அமெரிக்க படிப்புள்ளவர் பிஸினஸ் , அரசியலில் நுழைந்தால் , உடனே உச்சகட்டத்தை எட்டி விடுகிறார். அ மெரிக்கப் பட்டத்திற்கு இந்தியாவிலுள்ள மரியாதை அது. அது அனைவரும் அறிவர். இந்தியா வந்தால் வாழ்க்கை உயர்வதை Beetles போன்றவரில் கண்டாலும் அது , கண்ணிலோ, மனத்திலோ படுவதில்லை.

இந்திய மண்ணை மிதித்த அன்னிய நாட்டார்
வாழ்வில் சிறப்புப் பெறத் தவறுவதில்லை.

சிறு வயதில் வின்ஸ்டன் சர்ச்சில் பங்களூரில் இராணுவ ஆபீசராக இருந்தார். சில ஆண்டுகட்குப் பின் அவர் தாய்நாடு திரும்பினார். **சர்ச்சில் சிறு வயதில் பெரும் புகழ் பெற்றவர்.** அவரை இந்திய வைஸ்ராயாக நியமனம் செய்ய சர்க்கார் ஒரு சமயம் கருதியது என்பது செய்தி. மௌண்ட் பேட்டன் 1921 இல் Prince of Wales உடன் இந்தியா வந்தவர் , பிற்காலத்தில் பெரும் புகழ் பெற்றார். ஏது

கிருஸ்துவின் வாழ்வில் பதினெட்டு ஆண்டுகள் விவரமற்றுள்ளன. அக்காலத்தில் அவர் இந்தியா வந்திருந்தார் என ஓர் செய்தியுண்டு. அதைத் தீவிரமாக மறுப்பவர் ஏராளம். ஆங்கிலேயர் ஆட்சியில் கடைசி வரை அவர்களை தேச பக்த வீராவேசத்துடன் எதிர்த்தவர் மராட்டியர். **'சிங்க மராட்டியர் கவிதை கொண்டு சேரத்துதந்தம் பரிசளிப்போம் ' என்றான் பாரதி.** சிவாஜியின் வீரம் சாகஸம் பேர் போனது. வெல்லிங்டன் ஆங்கில தளபதியாகப் போரிட்டார். அவர் நெப்போலியனை வென்றவர். இங்கிலாந்து பிரதமரானவர். அயர்லாந்தில் பிறப்பது தாழ்ந்த இனமாகக் கருதப்படுவதால் தன் பிறப்பைக் குறிப்பிட வெல்லிங்டன் வெட்கப்பட்டார்.

**வெட்கப்படும் நிலையில் வெளிப்படும் வீரம்**
**உலகத் தலைமையைஇராணுவத்திலும்அரசியலிலும்**

எட்ட உதவி ஆசீர்வாதம் செய்வது இந்திய ஆன்மீகம். ஒரு காவற்காரனை சேரியிலிருந்து வந்து வேலை செய்தவனை சந்திக்கப் பயப்பட்டவருக்கு பத்து பேர் ஐம்பது பேர் நூறு பேரை வைத்து வேலை வாங்கவும், எங்கும் ஒன்பது மணிக்கு வேலைக்கு வருபவர்கள் அவரிடம் காலை ஐந்தரை மணிக்கு வந்து வேலை செய்யும் திறமையை அளிப்பது ஆன்மீகம். அதுவும் அன்னையின் ஆன்மீகச் சூழல். பாங்க் அதிகாரிகள் மதர் எஸ்டேட் , Beauty Land எழில் நிலம் அர்த்தமற்ற வேலைகளில் அனாவசியமாகப் பணம் செலவு செய்வதாகக் கருதினர். பிப்ரவரி இருபதாம் தேதி எஸ்டேட்டிற்கு வந்த ஏஜெண்ட் ஓரிடத்தில் நின்று காடான நிலத்தைக் கண்ணுற்றார். நாம் இறங்கிய வேலை பயித்தியக்காரத்தனம் என்று உணர்த்த விரும்பினார். “இந்த பரப்பில் ஐம்பது ஏக்கரை காடு வெட்டி , நிலத்தை சமமாக்கி , வரப்பு அமைத்து , நிலமாகப் பயிரிடும் நிலமாக ஆறு மாத காலத்தில் மாற்ற முடியுமா ? அதைச் செய்த பின் எவ்வளவு பணமும் தரலாம் ” என்றார். பிப்ரவரி இருபத்து ஒன்று தரிசன நாள். அதன் முன்னாள் பாங்க் அதிகாரிகள் வருவது வழக்கம். ஏப்ரல் இருபத்து நாலு அடுத்த தரிசன நாள். ஏப்ரல் இருபத்து மூன்றில் அறுபது நாள் கழித்து அதே அதிகாரி வந்தார். பிப்ரவரி இருபதாம் தேதி தாம் பேசிய இடத்தைக் காண வந்தார். அவர் கூறியது ஐம்பது ஏக்கர். கொடுத்த காலம் நூற்றுஎண்பது நாட்கள். அறுபது நாளில் நூற்று ஐம்பது ஏக்கர் அவர் கூறியது போல் காடு அழிந்து , பள்ளம் மேடு நிரவி, வரப்புப் போட்டு பயிரிடும் நிலமாக அது மாறியதைக் கண்டு பிரமித்தார். இது ஐம்பது ஏக்கருக்கு மேலுமிருக்கும் என்றார். எத்தனை ஏக்கர் எனக் கேட்டார். நூற்று ஐம்பது ஏக்கர் என அறிந்து வியந்தார். இதை சாதித்தது ஆன்மீகச் சூழல். **மேற்சொன்ன சாதகர் செய்த சாதனையிது. ஆன்மீகம் அற்புதம் செய்யும்.**

ஆன்மீகம் வெளிப்படுவது எனில் என்ன ? காப்பி ஸ்டாராங்காக இருக்கிறது எனில் பால் சுத்தமானது தண்ணீர் கலப்பில்லாதது , வசதியை வெளிப்படுத்துகிறது. சூடாக வருகிறது காப்பி எனில் ( interest) கவனமாக காப்பி கொடுப்பதை அறிகிறோம். இதைக் கடந்த அம்சம் ஒன்றுண்டு. **காப்பியை சாப்பிட்டவுடன் இது போல் இதுவரை நான் காப்பி சாப்பிட்டதில்லை என்று ருசி ஆச்சரியத்தை விளைவிப்பது காப்பி போட்டவர் தன்னை சாப்பிடுபவடுன் ஆத்மாவில் இணைந்து காப்பி போட்டார்** எனப் பொருள். அது ஆன்மீகம் வெளிப்படுவது. மகாத்மா காந்தியின் குரல் இந்தியாவின் மூலை முடுக்குகளிளெல்லாம் கேட்டு , கேட்டவர் வீறு கொண்டு எழுவது , அவர் அறை கூவலில் ஆன்மீகம் வெளிப்படுவதாகும். சர்க்கார் ( conscription) கட்டாயமாக இராணுவ சேவையைக் கோரி உத்தரவு பிறப்பித்தால், இளைஞர்களை போலீஸ் போய் பிடித்து வர வேண்டும். சர்ச்சிலுடைய அழைப்பை ஏற்று இராணுவ ஆபீசில் இளைஞர் கூட்டமாக வருவது அவர் அழைப்பில் ஆன்மீகம் வெளிப்படுவது. பாரத ரத்னம் பிரதமர்கட்கும் , C.V.ராமன்,விஸ்வேஸ்வரய்யா, போன்ற பிரபலஸ்தர்கட்கும் இதுவரை கொடுக்கப்பட்டது. இப்பொழுது பாடகியான எம்.எஸ்.சுப்புலட்சுமிக்கு அளிக்கப்பட்டதால் , **அவரது**

**பாடங்களில் ஆன்மீகம் வெளிப்படுகிறது எனப் பொருள்.** ஒரு பிரார்த்தனை பெரிய கருத்து. பெரும் செயல் அற்புதங்களை நிகழ்த்துவது ( *Savitri*) பிரார்த்தனையில் ஆன்மீகம் வெளிப்படுகிறது. நிலத்தை சரிவர பராமரித்தால் உழுது, எரு போட்டு பயிரிட்டால், அதிகப் பலன் மகசூலாகக் கிடைப்பது உழைப்பு பலனில் வெளிப்படுவதைக் காட்டும். புஞ்சை நிலத்தில் உழுது , எரு விட்டு, பயிரிட்ட பொழுது, தண்ணீர் கிடைப்பது நிலம் நம் உண்மைக்கு ஆன்மீகத்தை வெளிப்படுத்துகிறது.

உலகத்தில் அனைத்து செயல்களும்
ஆன்மீக வெளிப்பாடான செயல்களானாலும் நாம்

சிலவற்றை மட்டும் அப்படிக் கருதுகிறோம். தியானம், பூஜை, விரதம், நோன்பு, காணிக்கையை மனிதன் ஆன்மீகச் செயல்களாகக் கருதுகிறான். அவன் பேசுவது , உடுப்பது, உண்பது அப்படித் தெரிவதில்லை. உடல் எனும் தெய்வத்திற்குச் செய்யும் பூஜை உண்பது என்ற விளக்கம் **ஆன்மா இல்லாத இடமில்லை,செயலில்லலை எனக் காட்டும்.** ஹரி ,ஹரி என்றாள் அன்னை எனில் அது அவள் அபயக் குரல் மட்டுமல்ல , ஆபத்தில் ஆத்மாவை எட்டி ஆத்மா எழுப்பிய குரல் துகில் வளர்ந்தது. பத்ம பாதர் கங்கையை சங்கரர் அழைப்பிற்கேற்ப பத்மத்தில் கால் வைத்துக் கடந்தார். ஐம்பதாம் மைலில் புத்தர் வருவது அவர் ஆத்மா பவனி வருவதைக் குறிக்கும். மேல் நாட்டாருக்கு ஆன்மீகம் உண்டு. ஆன்மீக நம்பிக்கையுண்டு. Saints மகான்கள் எலும்பை கடற்கரைக்குக் கொண்டு வந்தபொழுது பல நாளாக எதிர்பார்த்த காற்றெழுவது ஆன்மீகச் செயல். மாரிஸ் குட்மென் மருத்துவத்தால் குணமாகவில்லை. ஆன்ம பலத்தால் குணமானார். Life ஆசிரியர் பென்சிலீன் ஷாக்கால் இறந்து கொண்டிருந்த சமயம் , **"நான் இறக்க மறுக்கிறேன்"** என்று அவர் எடுத்த முடிவு மனம் கண்டதல்ல , ஆத்மா கண்டது. அதுவும் சத்திய ஜீவியம் உலகில் வந்தபின் என்பதால் , அவர் ஆத்மாவின் குரலைக் கேட்டு ஆண்டவன் பதிலிறுத்தான். பத்து பிள்ளைகள் உள்ள வீட்டில் மூத்தவன் SSLC பெயில், அடுத்தவன் இன்டர் மீடியட் பாஸ், அடுத்தவன் ஒன்பதாம் வகுப்புடனும் , அடுத்தவன் ஆறாம் வகுப்புடனும் , அடுத்தவன் மூன்றாம் வகுப்புடனும், அடுத்தவன் SSLC பெயிலாகியும் , கடைசி பையன் ஐந்தாம் வகுப்புடனும் , அதற்கு முந்தையவன் எட்டாம் வகுப்புடனும் படிப்பை முடித்தபொழுது அதற்கு முன் பையன் SSLC பாஸ் செய்து,B.Sc. (Agri.)முடித்து, ஆபீசராகி, தொழிலதிபராகி, பல ஆயிரம் கோடி சம்பாதித்தது , ஆசிரியர் திறமையாலல்ல, அதிர்ஷ்டவசமான செயலல்ல , **பையனுடைய ஆத்மா அன்னை அருளை ஏற்று நன்றியுடனும், உண்மையான சரணாகதியால் ஏற்றது எனப் பொருள்.**

ஆன்மா வெளிப்பட்டால் சாப்பாடு அமிர்தமாகும். மனைவி தெய்வமாவாள். குழந்தை கொண்டாடுமுன் தெய்வமாக மாறும் , நேரம் தெய்வீக நேரமாகும் , இடம் புனித ஸ்தலமாகும் , நண்பர் பக்தராவார்கள். மனித குரு ஜகத்குரு ஆவார். இந்தியா பாரதம் என்ற நாடு என்று மட்டுமன்றி , அகில உலக ஆன்மீக ஸ்தலமாகும்.

ஆன்மீகத்தைத் தேடி இந்தியா வருபவர்கள் இந்தியரை நாடுவதில்லை என்று பகவான் கூறுகிறார். **ஆன்மீகம் இந்தியாவிலிருக்கிறது , இந்தியரிடமில்லை என்பது யோசனைக்குரிய விஷயம்.** ஒரு இலட்சியத்தை நாட்டில் பரப்ப ஓர் ஸ்தாபனம் ஏற்பட்டால் அந்த ஸ்தாபனம் அந்த இலட்சியம் அழிய வேலை செய்யும். Organisation kills the ideal. கிருஸ்த்துவ பாதிரிமாரிடம் ஓர் வழக்குண்டு. கணவனும் , மனைவியும் உலாவும்பொழுது மனைவி "My dear I have stumbled on an ideal" என்றார். கணவன்

பதிலாக “Don’t worry, we shall organise it” என்றார் என்பது அவ்வழக்கு. நான் ஓர் இலட்சியத்தின் மீது இடறி விழுந்தேன் என்ற மனைவிக்கு கவலையில்லை , நாம் அதை ஸ்தாபனமாக்குவோம் என்று பதில் கூறும் கணவன் **ஸ்தாபனமானால் லட்சியம் அழியும்** என்கிறார். பல்கலைக்கழகங்கள் , வினோபா ஆசிரமம், காந்தி சமாதான ஸ்தாபனம் போன்ற இடங்களில் அவர்கள் இலட்சியத்தை அறிய ஆயிரம் வழிகளுண்டு. அங்குள்ளவர் எவரும் அதைக் கருதுவதில்லை என்பது நெடுநாளைய அனுபவம். Arnold J.Toynbee என்பவர் பிரபல சரித்திர ஆசிரியர். அவர் ஆராய்ச்சிக்கு 1945 இல் $17000 கொடுத்தது. அவர் ஆராய்ச்சியை முடித்து பத்து வால்யூம் எழுதினார். உலகம் அவரை sage ஞானியெனக் கருதியது. பல சர்க்கார்கள் அவரை நாடி ஆலோசனை கேட்டார்கள். **Philosophy of History.**முதன் முதலாக சரித்திரத்தின் தத்துவத்தை அவர் ஆராய்ந்தார். அவர் 1956 இல் இந்தியா வந்தார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பேருரை ஆற்றினார். ஸ்ரீ அரவிந்தாஸ்ரமம் வந்தார். நமது சொஸைட்டி அன்பர் இலண்டன் போன பொழுது அவரது ஆராய்ச்சி நிலையத்திற்குப் போனார். அங்கிருந்த பிரமுகர் ஆச்சரியப்பட்டு “நீங்கள் Toynbee எழுதியவற்றைப் படித்திருக்கிறீர்களா ? **இங்கு எவரும் அவர் எழுதியவற்றைப் படிப்பதில்லை** ” என்றார். ஆன்மீகம் இந்திய மண்ணில் , இந்தியர் சூழலில் அபரிமிதமாக இருக்கிறது. அதை இந்தியர் அறிவதில்லை. அவர்கட்கு அமெரிக்கா முக்கியம். அமெரிக்கர் மகேஷ் யோகியை ஏற்றால் அதன்பின் இந்தியர் அவரை ஏற்பார்கள். இந்திய மனப்பான்மை அமெரிக்க வாழ்வைப் பாராட்டுகிறது. அதைப் பின்பற்றப் பாடுபடுகிறது. **இந்தியாவில் எழுந்தவையாயினும் அமெரிக்கர் பாராட்டினால் தான் அதன் முக்கியத்துவம் நம்மவர்க்குத் தெரியும்.**

இந்தியாவை ஆள வந்த பிரிட்டன் உலகெங்கும் சாம்ராஜ்யம் நிறுவினர். சூரியன் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் அஸ்தமனமாவதில்லை எனப் பெயர் வாங்கினர். பிரிட்டனுக்கு முதல் உலக சர்க்கார் நிறுவும் வாய்ப்பிருந்தது என்று பகவான் கூறினார். அது இந்திய ஆன்மீகப் பெருமை. சைனா 1962 இல் இந்தியாவைத் தாக்கியது. அன்னை அத்தாக்குதலுக்கு முன் கல்கத்தா வீதிகளில் சீனர்களைப் பார்த்து இந்தியரை எச்சரித்தார். **இந்தியர் எச்சரிக்கையைப் பாராட்டவில்லையென்ற பொழுது அன்னை சீனாக்காரர்களை திரும்பிப் போகச் சொன்னார். அவர் கூறியதை ஏற்று சீனாக்காரர்கள் திரும்பிப் போனார்கள்.**இந்திய ஆன்மீகம் அவரைத் தீண்டியது. 1972 இல் நிக்ஸன் வந்தார். சைனா அமெரிக்க மார்க்கட்டாயிற்று. அமெரிக்கா சைனா மார்க்கட்டாயிற்று. இன்று இச்சைனா அமெரிக்காவின் மொத்த வருமானத்தை கடக்கும் நிலையில் உள்ளனர். 1945இல் ஜப்பான் போரை இந்தியஎல்லைக்குக் கொண்டு வந்தது. இந்திய ஆன்மீகப் ஸ்பர்சிக்கப்பட்டது. அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக உலகில் பெரிய வருமானமுள்ள நாடாக ஜப்பான் மாறியது.

### ஆன்மீகம் ஆழமாக மனிதனைத் திருவுருமாற்றும்

சிங்கப்பூர் சிறு நாடு. 272 சதுர மைல் பரப்புள்ளது. 14 மைல் நீளம் , 26 மைல் அகலம். சென்னையை விட சிறு இடம். புதுவை மாநிலம் அளவுள்ளது. **அன்று இந்திய குற்றவாளிகள் சிங்கப்பூரை நிர்மாணம் செய்தனர். இன்று அதன் Per Capita GDP USA க்கு சமமாக சில ஆண்டுகள் உயர்ந்திருந்தது.** ஹாலந்த் அமெரிக்காவுக்கு அடுத்த பணக்கார நாடு. அவர்கள் சென்னையில் இன்று ராஜாஜி ஹால் , கோட்டை என்றழைக்கப்படும் கட்டிடங்களைக் கட்டி வர்த்தகம் செய்தனர். இந்திய ஆத்மாவுடன் தொடர்பு கொண்டதால் இன்று செல்வம் பெருத்த நாடாகிறது. பிரான்ஸ் புதுவை , சந்திர நாகூர் , மாகி, ஏனாம் என்ற இடங்களில் அரசாண்டனர். அது 1639இல் ஏற்பட்டது. **1789இல் பிரான்ஸ் ஐரோப்பாவை ஆண்டது.** இன்று உலகெங்கும் அறிவு , விஞ்ஞானம், இலக்கியம், சிற்பம், மக்களாட்சி, ஓவியம் என

வழங்குபவை கிரீஸில் உற்பத்தியானவை. அத்தனையையும் கிரீஸ் பெர்ஷியா மூலம் இந்தியாவிலிருந்து பெற்றவை. உலகில் Law சட்டம் என உலவுவது Roman Law ரோமாபுரி கிரீஸிலிருந்து பெற்ற ஞானத்தை சட்டமாக வடித்தெடுத்து பெரும் சாம்ராஜ்யத்தை நிறுவி ஐநூறு ஆண்டுகள் ஆட்சி செய்தது. நம்பர் என உலகில் வழங்குவது Arabic numerals. அவை இந்தியாவில் உற்பத்தியானவை.

அயர்லாந்து ரோமாபுரி இங்கிலாந்தை ஆட்சி செய்த காலத்தில் சுதந்திரமாக இருந்தது. ரோம சாம்ராஜ்யம் சட்டத்தால் வாழ்வை உயர்த்தியது. **இங்கிலாந்தும், ஸ்காட்லாண்டும் அப்படி நாகரீகம் எய்தின. அயர்லாந்து அப்பலனைப் பெறவில்லை.** 1000ADமுதல் இங்கிலாந்து சுதந்திர நாடாக மாறியபொழுது நாகரீகமுள்ளதாக அமைந்தது. அயர்லாந்து பின்தங்கிய நாடாயிற்று. இங்கிலாந்தில் அயர்லாந்து மக்களை ஒதுக்கப்பட்டவர் , தாழ்த்தப்பட்டவராக நடத்தினர். இங்கிலாந்தின் ஆட்சிக்குள் அயர்லாந்து வந்தது. 1700க்குப் பின் இங்கிலாந்து வியாபாரத்தால் வளம் பெருந்திய நாடாகி , காலனிகளை உடைய நாடாகி , ஐரோப்பாவில் செல்வாக்குள்ள முக்கியநாடாக மாறியது. அயர்லாந்து வறுமையும் சிறுமையும் பெற்று கேலிக்குரியதாகக் கருதப்பட்ட நேரம் இங்கிலாந்து பிராடஸ்டண்டு நாடாகவும் அயர்லாந்து கத்தோலிக்க மக்களையுடையதாகவுமாக மாறியது. **பிரதமாரான பின் தான் அயர்லாந்தின் பிறந்தவன் எனக் கூற வெல்லிங்டன் வெட்கப்படுமளவுக்கு அயர்லாந்து மோசமான நிலையிலிருந்தது.**1920இல்தென் அயர்லாந்து சுதந்திரம் பெற்ற பின் னும் Home rule இயக்கம் வந்தும் EU அமையும்பொழுது அயர்லாந்து EUவில் கடைசி நாடாகவே இருந்தது. அயர்லாந்தில் பிறந்த தாயாருக்கும் ஸ்காட்லாண்டில் பிறந்த தகப்பனாருக்கும் பிறந்தவர் 1970இல் ஆசிரமம் வந்தார். அவரை 1967இல் இந்தியாவுக்கு அழைத்தவர் தன் முதலீடு முப்பது மடங்கு பெருகியதால் அவரை இங்கு அழைத்தார். அவர் வந்து நண்பரை சந்தித்த அன்று நண்பர் திவாலாகி ஊரை விட்டுக் கிளம்பும் நிலையிலிருந்தார். அவர் மூலம் இந்த அமெரிக்கர் வேறொரு அன்பருக்கு அறிமுகமானார். ஜனவரி 19ம் தேதி அறிமுகமானவர் பெரிய சொத்து ஜனவரி 26இல் அவர் கையை விட்டுப் போயிற்று. 1990இல் கலிபோர்னியாவில் ஒரு கம்பனியில் வேலை செய்ய இவர் ஆரம்பித்து அக்கம்பனியை மூடி விட்டார்கள். அடுத்த ஆண்டு Toranto வில் ஓர் கம்பனியில் வேலையை ஏற்றுக் கொண்டார். ஓராண்டில் அது திவாலாயிற்று. **அயர்லாந்து பஞ்சத்தில் அடிபட்டதால் நாலு கோடி மக்கள் அங்கிருந்து வெளிநாட்டிற்குப் போனார்கள். இன்று நாற்பது இலட்சம் பேர் அயர்லாந்து ஜனத்தொகை.**அயர்லாந்து பஞ்சத்திற்கும், வறுமைக்கும், ஏழ்மைக்கும், தரித்திரத்திற்கும் பேர் போன ஊர். அவர் 1970 முதல் 2000 வரை புதுவையிலிருந்தார். 2000இல் அயர்லாந்து இங்கிலாந்தை விட அதிக வருமானமுள்ள நாடாக மாறியது. **இது இந்திய ஆன்மீக சிறப்பு , முத்திரை.** இவர் மேனேஜ்மெண்ட் கன்ஸல்ட்டண்டாக 1986இல் தினமும் $1000 சம்பாதித்தார். 1988இல் அது $2000டாலராயிற்று. இன்று அத்தொழிலைக் கைவிட்டு டாக்ஸி டிரைவராக தினமும் $100சம்பாதிக்கிறார். **தரித்திரத்தின் சின்னமானவர் நம்பிக்கை மூலம் இந்திய ஆன்மீகம் அவர் நாட்டையே பணக்கார நாடாக மாற்றியது.**

1921இல் எட்வர்ட் இளவரசனாக இந்தியா வந்தபொழுது அவரை நாடு பகிஷ்காரம் செய்து கறுப்புக்கொடி காட்டி திரும்ப போகச் சொல்லிற்று. 1938இல் அவர் இங்கிலாந்து மன்னரான பொழுது அமெரிக்க விவாக ரத்து செய்த சிம்சன் என்பவரை மணக்க அவர் முடிவு செய்ததால் , பட்டத்தைத் துறந்தார். ஆன்மீகம் மறுத்தவரை சிம்மாசனம் ஏற்கவில்லை. கி.பி. 324இல் அலெக்ஸாண்டர் இந்தியா

மீது படையெடுத்தார். **படையெடுப்பால் கிரீஸ் இந்தியாவின் ஆன்மீகச் சூழலால் தீண்டப்பட்ட து.** கிரீஸின் ஞானம் ஐரோப்பா முழுவதும் 1500க்குப் பின் பரவியது. இன்று உலகம் ஞானம் என அறிவது கிரீஸ் இந்தியாவிலிருந்து பெற்ற 'ஆன்மீக' ஞானம். தென்னிந்தியா முழுவதும் பாறையாலானது. எழுபது அடிக்கு மேல் பாறை தான் எங்கும் காணப்படும். அன்பர் விவசாயம் செய்யுமிடத்தில் அறநூறு அடி வரை நீருற்றுள்ளது. கங்கை சமவெளியில் ஆயிரத்து ஐநூறு அடி ஆழம் வரை பாறையில்லை. **நீர் வளம் நெஞ்சின் உணர்ச்சியைப் பிரதிபலிக்கிறது. உணர்ச்சி ஆன்மீகத்தை எளிதில் ஏற்கும்.**

இரண்டாம் உலகப் போருக்குச் சென்ற ரஷ்ய வீரன் திரும்ப வந்த பொழுது தன் மனைவி தனக்கு விஸ்வாசமாக இருந்ததை நினைத்து உள்ளம் பூரித்தான். அவன் நளவெண்பாவை ஆங்கிலத்தில் படித்து தமயந்தியின் கற்பு , விஸ்வாசம், சத்தியம், பிரியத்தை தன் மனைவியில் கண்டு அதைக் கொண்டாட நளவெண்பாவை ரஷ்ய மொழியில் பெயர்த்து எழுதினான். பெண்ணின் கற்பு ஆன்மீக வாழ்வை அவளுக்குத் தருகிறது. கற்புக்கரசிக்கு அவள் கற்பு மோட்சம் பெற்றுத் தருகிறது. **கற்பு பெண்மையின் ஆன்மீகச் சின்னம்.** பென்னட் எந்த நிர்ப்பந்தமுமில்லாத நேரம் தன் மகளுக்காக செலவை தான் ஏற்க முடிவு செய்தது அவருடைய பெரு நெறி. **கற்பு பெண்ணிற்குக் கண் போன்ற பெருநெறி.**

உலகில் எது நடக்க வேண்டுமானாலும் அது முதலில் ஆசிரமத்தில் நடக்க வேண்டும் என்றார் அன்னை. இன்று இந்தியா உலகில் ஸ்ரீ அரவிந்த ஆஸ்ரமமாகிவிட்டது. இந்திய சுதந்திரமும் , பசுமைப் புரட்சியும் **உலகில் பரவின. 1947க்குப் பின் இந்தியன் விழித்துக் கொண்டு ஆர்ப்பாட்டம், அட்டகாசம் செய்தான். உலகமே விழித்துக் கொண்டு மனித சமூகத்தை எடுத்தெறியும் ஹிப்பி இயக்கத்தை அமெரிக்காவில்உற்பத்தி செய்தது .** அதன் சிகரம் டாம் பீட்டர்ஸ் , பணத்தில் பில்கேட்ஸும் , ஸ்டீவ் ஜாபும் எழுந்தனர். இந்திய சுபீட்சம் மயிரிழை வளர்ந்தது. கூலி 15 பைசாவிலிருந்து ஒரு ரூபாயாயிற்று. உலகத்தில் செல்வம் கொழித்தது. இன்று அந்த கூலி 600 ரூபாய். அமெரிக்க டாக்ஸிடிரைவர் தினமும் Rs.12,000 சம்பாதிக்கிறான். இந்திய குற்றவாளிகள் கட்டிய சிங்கப்பூர் அமெரிக்க செல்வ நிலையை எட்டித் தொட்டது. இந்திய மண் ஒன்றுபட அன்னியனை இயற்கை வரவழைத்தது. 1881இல் இந்தியாவின் எல்லாப் பகுதிகளும் ஒன்றுபட்டன. அமெரிக்க மாநிலங்கள் ஐம்பத்திரண்டு இணையும் முயற்சியை எதிர்த்து தென் மாநிலங்கள் போரிட்டு அடிமைகளை சொத்தாகப் பெறும் உரிமையை நிலைநாட்ட விரும்பினர். அடிமையின் சுதந்திரமும் , ஐம்பத்திரண்டு மாநில ஒற்றுமையும் ஒரே சட்டத்தால் நிறைவேறியது. இந்திய மண் ஒன்றுபட்டால் உலக ஒற்றுமைக்கு அது வித்து. பல நூற்றாண்டுகளாக போர்மயமான ஐரோப்பா 1945க்குப் பின் நிலக்கரி, இரும்புக்காக ஒன்றுபட விரும்பி, கொஞ்சம் கொஞ்சமாக EUவை அமெரிக்க உதாரணத்தை பின்பற்றி எழுப்பவும் , USSR கொஞ்சம் கொஞ்சமாக சரியவும் 1990இல் வல்லரசுகள் போராட்டமான cold war சூரியனைக் கண்ட பனிபோல மறைந்தது. **டென்ஷன் மறைந்து,**

**இன்டர்நெட் உலக ஐக்கிய கருவியாக எழுந்தது.**

பசுமைப் புரட்சியில் இந்தியன் விழிப்புறும் அறிகுறிகள் தென்பட்டன. Micro credit பெண்கட்கு சிறு கடனுதவி தரும் பெரும் முயற்சி பங்களாதேஷில் வெற்றி பெற்று யூனஸுக்கு நோபல் பரிசு பெற்றுக் கொடுத்தது. Prosperity 2000 இந்தியாவில் ஒரு கோடி வேலை வாய்ப்பை எழுப்பலாம் என ICPF மூலம் சர்க்காருக்கு 1992இல் கூறியதை சர்க்கார் ஏற்றது. 2000இல் அதை 150 மாவட்டங்களில் சோதனை செய்தனர். இன்று நாடு முழுவதும் அது செயல்படுகிறது. **உலகம் வேலையில்லாத் திண்டாட்டத்தை**

**அறிய அரும் பெரும் முயற்சியைக் கைக்கொண்டு அதன் அஸ்திவாரமான economicsயைஇன்று புதுகோணத்தில்**ஆராய முற்பட்டதால் 1929முதல் உலகை வதைக்கும் பொருளாதார நெருக்கடியும் , வேலையில்லாத் திண்டாட்டமும் அடியோடு ஒழியும் நிலை உருவாகி விட்டது. அவை திருவுருமாற்றமடைந்து புதுப்பொருளாதார அடிப்படையில் உலகம் புதுமையாக உருவாகும் நிலை ஐரோப்பாவில் எழுகிறது.

வாய்ப்புகள் அபரிமிதமாக நிறைந்த அமெரிக்க நாட்டினர் இந்தியா வந்து தங்கள் நாட்டிலில்லாத தொழில் வாய்ப்பு இந்தியாவில் இருப்பதைக் காண்கின்றனர். இருபது இலட்சம் செலவாணியாகும் அமெரிக்க கம்பனிக்கு நாற்பது இலட்சம் வருமானமும் எண்ணூறு கோடி தொழில் வாய்ப்பையும் இந்தியா அளிப்பது நிதர்சனம். உலகெங்கிருந்தும் எண்பது இலட்சம் இளைஞர்கள் அமெரிக்காவுக்குப் படிக்க வரும் இந்நாளில் அமெரிக்கர் இந்தியாவில் வந்து உலகிலில்லாத ஞானம் பெறுவது

**இந்திய ஆன்மீகம் அமெரிக்க ஞானமாக வெளிப்படுமிடம்.**

ஆன்மீகம் வாழ்வின் அடிப்படை, வித்து. இந்திய ஆன்மீகம் உலக சுபீட்சத்தின் உயிர் நாடி. ஞானம் என்பது செயல்திறன். காரியத்தை முடிக்கும் திறமை, விஷயங்களை அறிந்து முடிக்கும் வழியை வகுக்கும் அறிவு, **அவற்றைக் கடந்த ஒரு பிரச்சினையை ஆதியோடுஅந்தமாய் அலசி ஆராய்ந்து அதன் சாரத்தை மனதில் ஏற்று வரவேண்டிய முடிவை மனம் அறியுமானால்**உலகில் காரியம் முடியும் என்பது ஆன்மீகச் சட்டம். 20,000 அணு ஆயுதங்கள் அப்படி அழிக்கப்பட்டன. முதல் கூட்டம் போடுவதற்கு பத்து நாள் முன்பு அது முடிந்து விட்டால் **ஆன்மீகம் அபரிமிதமாகப் பொருளீட்டும்.**

உடல் உழைக்கிறது. உழைப்பால் உயர்ந்த உத்தமருண்டு. உழைப்பு உயிர் வாழ உதவும். உயிரால் உழைப்பது ஊரைக் கூட்டி வாழ்வது. அது வியாபாரம். வீடு கட்ட சொத்து சம்பாதிக்க வியாபாரம் உதவும். அறிவும் உழைக்கும். நடைமுறையில் அறிவாளி வறுமையில் வாடி செல்வரை அண்டி வாழ்ந்த காலம் 1900 வரை. துறவி வாழ்வை வெறுத்து ஒதுக்கி காட்டில் தவம் புரிந்தாலும் அவனைத் தேடி அவனுக்கு வேண்டிய உணவு வரும். **“இருக்குமிடம் தேடி என் பசிக்கு உருக்கமுடன் கொண்டு வந்தால் உண்பேன்” என்பது தவசி கூறிய பெரும் சொல்.** தவம் வாழ்வை விலக்கிய பொழுதும் அது தவம் பெற்ற வலிமை.

பூரண யோகம் வாழ்வைப் புனிதமாக ஏற்றது. பகவான் புதுவை வந்தபொழுது புராணி வந்தவர் பண உதவி செய்ய முன் வந்தார். இப்போதைய தேவை பூர்த்தியாகிறது. தற்சமயம் தேவையில்லை என்றார். பாரதியைப் பார்த்த பகவான் அவர் minus இல் வாழப் பயின்றவர் என்றார். பகவானைச் சுற்றி முதலில் ஐந்து பேரும் , பிறகு பதினைந்து பேரும் உள்ள நிலையில் அன்னை வந்தார். சிரபுஞ்சியிலும் கவனக்குறைவால் அழிச்சாட்டத்தால் தண்ணீர்ப் பஞ்சம் வரும். பகவானுக்கும் பணக்கஷ்டம் யோகத்தை ஏற்காத மற்றவரால் ஏற்பட்டது. என்றாலும் சட்டம் சட்டமே. மிளகாய் வற்றல் சாப்பிட்ட மறுநாள் இரண்டாயிரம் ரூபாய் வந்து உடனே செலவாயிற்று. பகவானுடைய புத்தகங்களுள் உள்ள பணத்தை சேர்த்து எண்ணிய பொழுது மூவாயிரம் ரூபாயிருந்தது. அவருக்குப் பணக்கஷ்டம் வந்த நாளில் வாடகை முப்பத்தி ஐந்து ரூபாய் கொடுத்தார். இன்று அந்த வீட்டிற்கு வாடகை முப்பத்தி ஐந்தாயிரம் ரூபாய்.

**பணக்கஷ்டம்**பகவானுக்கில்லை. அறிவு அர்த்தமுள்ளதானால் , வாழ்வை விட்டு விலகாவிட்டால் , மோதிலால் போல் மனிதன் சம்பாதிப்பான். ஐந்து ரூபாயில் எளியவன் ஒரு மாதம் குடும்பம் நடத்திய நாளில் ஒரு நாளில் இலட்சத்தைச் சம்பாதித்தார் மோதிலால் நேரு. இன்று அது போன்ற வக்கீல்கட்கு ஒரு நாளைக்கு பத்து இலட்ச ரூபாய் ஃபீஸ்.

**அறிவின் உழைப்புக்கு ஆயிரம் மடங்கு வலிமையுண்டு.**

டாம் பீட்டர்ஸ்க்கு 1990இல் தினமும் $20,000 பீஸ். இன்று $80,000.

**ஆத்மா அறிவைக் கடந்தது. அதன் உழைப்பு அற்புதம்**

**ஆன்மீகம் விழித்து வாழ்வை ஏற்றால் ஒருவர் வருமானம் ஊரையே பாதுகாக்கும்.**Education is the yoga of society. கல்வி சமூகத்தின் யோகம். இன்று கல்வியை நாடும் பள்ளிகள் ஆயிரக்கணக்காகசம்பாதிக்கவில்லை. கோடிக்கணக்காக சம்பாதிக்கிறார்கள். ஒரு நல்ல சிறிய பள்ளியில் நூறு மாணவர்களிருந்தால் நியாயமான முறையில் அப்பள்ளி ஸ்தாபகருக்கு ஆண்டிற்கு பத்து கோடி பணம் ஈட்டும். இது ஆன்மீகம் பெற்ற திறன். கல்வித் துறையில் வெளிப்படுவது. எல்லாத் துறைகளிலும் ஆன்மீகம் செல்வமாகவும் , பிரபலமாகவும், விருதாகவும், விழிப்பாகவும், விறுவிறுப்பாகவும், சுறுசுறுப்பாகவும் முனைந்து விரைந்து எழுவதன் ஊற்று இந்தியா.

இந்தியா எனில் அது ஆன்மீகம்.
**ஆன்மீகம் என்றால் அது இந்தியா.**

இந்தியாவுக்கு வந்தவர் அவர்கள் அறிந்தாலும் அறியாவிட்டாலும் ஆன்மீகப் பயன் பெறுகிறார். அது எப்பொழுது வெளிப்படும் , எப்படி வெளிப்படும் என்பது அவர் குணவிசேஷத்தைப் பொருத்தது. ராஜஸ்தானில் ஏழு வருஷமிருந்தவர் பத்து வயதில் தாய் நாடான அமெரிக்கா திரும்பி திருமணம் செய்து பேரன், பேத்திகளைப் பெற்று எண்பத்து எட்டாம் வயதில் இந்தியாவில் ஆன்மீக வாழ்வு வாழும் பெண்மணியின் தகப்பனாரை அவரது தொண்ணூறு வயதில் சந்தித்தார்.

இருவரும் இணைபிரியா இருதுருவங்களானார்கள்.
**இதுவரை நாங்கள் அறியாத பேரானந்தம் கடந்த மூன்று ஆண்டுகளாக இடைவிடாது நாங்கள் அனுபவிக்கிறோம்.**
பணம் ஏராளமான முதியோர் வாழ்வு.
We are in heaven Super heaven all the time.
சந்தோஷம் பொங்கி எழுவது எண்பத்து எட்டு வரை அறியாத புது அனுபவம்.
உலகெங்கும் பிரயாணம் செய்யும் உடல் நலம்.
உலகம் இன்பம் பெற விழையும் உள்ள நலம்.
**மனித வாழ்வு - ஆண், பெண் உறவு - இந்த அளவு இனிக்கும் என எண்பத்து எட்டு வயது வரை தொண்ணூறு வயது வரை கேள்விப்பட்டதில்லை.**

இது இந்தியாவில் அப்பெண்மணி ஏழு ஆண்டிருந்ததன் பலன்.அவர் இருமுறை இந்தியா வந்திருக்கிறார். அவர் பெண் ஆன்மீகச் சூழலில் இந்தியாவில் நாற்பத்து இரண்டு ஆண்டுகளாக இருப்பதால் ஏற்பட்ட வாழ்வின் பலன்.

================================================================